2022 மே 4]

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக, 70 நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு 6 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பதிவு செய்யப்படாமலிருக்கின்ற நிறுவனங்களில் வக்ஃப் வாரிய சொத்தினைப் பதிவு செய்தால், மத்திய வக்ஃப் வாரியத்தின் மூலமாகவும் அதற்கு 75 விழுக்காடு நிதியினைப் பெற்றுக் கொடுத்து, மாநில அரசும் அதில் இணைந்து வருவாய் ஈட்டுகின்ற வகையில் அந்தச் சொத்துகளைப் பாதுகாக்கின்ற வாய்ப்புகள் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

220—

விளையாட்டு மைதானம்

***12165—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஏந்தல் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏந்தல் ஊராட்சியில் கைப்பந்து மைதானம், கபடி விளையாட்டுக்கான திடல், அதேபோன்று இறகுப் பந்து மைதானம் ஆகியவற்றிற்கு அந்தப் பகுதியில் ஒரு திறந்தவெளி உடற்பயிற்சி மையம்

அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த விளையாட்டு மையத்தினை ஏந்தல் ஊராட்சியில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதியைச் சேர்ந்த ஏந்தல் ஊராட்சியின் அருகிலுள்ள பொற்பாலம்பட்டு, பெரியபகண்டை மற்றும் வாணாபுரம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள மாணவச் செல்வங்கள் மற்றும் இளைஞர்கள் அனைவரும் அந்த விளையாட்டுத் திடலில்தான் விளையாட வேண்டியுள்ளது. ஆகவே, அதை மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானமாக அமைத்துக் கொடுத்தால், அவர்களுக்கு வசதியாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற ஏந்தல் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியிருக்கின்ற அனைத்து கிராம ஊராட்சிகளில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயன்படுத்தும் வகையில், அந்த விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

2022 மே 4]

திரு. க. கார்த்திகேயன்: *பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2017 ஆம் ஆண்டு கபடி போட்டியில்* International level*-ல் எனது தொகுதியைச் சேர்ந்த அந்தோணியம்மாள் என்ற மாணவி வெற்றி பெற்றிருக்கின்றார். 2019 ஆம் ஆண்டு பாலமுருகன் என்ற வீரர் மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றிருக்கின்றார். அதேபோன்று, கராத்தே போட்டியிலும்* International level*-ல் பதக்கங்களைப் பெற்றிருக்கின்றார்கள். முழுக்க முழுக்க கிராமப் பகுதிகள் நிறைந்த என் தொகுதியில் ஒரேயொரு பேரூராட்சி இருக்கின்றது. அந்தப் பேரூராட்சியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *அந்த மணலூர்பேட்டை பேரூராட்சியிலும் ஒரு நவீன விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்தால், அங்குள்ள மாணவர்களுக்கு வசதியாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுத் துறையில் உலக அளவில், இந்திய அளவில் சாதனை படைக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப உடனுக்குடன் அரசு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், அந்தோணியம்மாள் அவர்களையும், பாலமுருகன் அவர்களையும், கடந்த காலங்களில் அவர்கள் நிகழ்த்தியிருக்கின்ற சாதனைகளுக்கேற்ப, அரசுப் பணியில் அமர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.*

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற பேரூராட்சிப் பகுதியிலும் விளையாட்டு மைதானம் அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, தட்டரணை கிராமம், விசாரணைக் கைதி இறந்தது–கூடுதல் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் 29 அன்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் நேரமில்லா நேரத்தில் பேசியபோது, திருவண்ணாமலை சம்பவம் குறித்து இந்த அவையினுடைய கவனத்திற்கு அவர் கொண்டு வந்தார். அதற்கு விளக்கமளித்து நான் பேசியபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னேன். உடற்கூராய்வு முடிந்ததற்குப் பின்பு, இந்த அவைக்கு அதனை நான் தெளிவுபடுத்துவேன் என்று சொல்லி இருந்தேன்.*

அதுகுறித்த தகவல் என்னவென்றால், திருவண்ணாமலை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் மதுவிலக்கு வழக்குப் பதிவு செய்து 26–4–2022 அன்று கைது செய்யப்பட்ட தங்கமணி, கிளைச் சிறைச்சாலையிலே ஒப்படைக்கப்பட்ட பிறகு அவருக்கு வலிப்பு ஏற்பட்ட காரணத்தால் 27–4–2022 அன்று மரணம் அடைந்திருக்கிறார். மரணம் குறித்து வழக்குப் பதிவு செய்து, நீதித் துறை நடுவர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி உடற்கூராய்வு முடிக்கப்பட்டது.